# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1981/33 - 2016 අගෝස්තු මස 23 වැනි අඟහරුවාදා - 2016.08.23

*1981/33 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மோட்டார் வாகனப் போக்குவரத்து மாகாண ஆணையாளர் காரியாலயம் (மேல் மாகாணம்)**

*தகைமைச் சான்றிதழ்களை வழங்குவதற்கான வாகன பழுதுபார்ப்பு நிலையங்களை பதிவு செய்தல்*

*மக்கள் சேவைகளுக்காக ஈடுபடுத்தப்படும் (பேருந்து வண்டி அத்துடன் லொறி போன்றன) வணிக வாகனங்களுக்காக தகைமைச் சான்றிதழ்களை வழங்குவதற்காக மேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள பின்வரும் தகைமைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்காக வாகனப் பழுதுபார்ப்பு நிலையங்கள் வருடாந்தம் பதிவு செய்யப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கம்பனிகள் பதிவாளரிடம் வியாபாரத்தினைப் பதிவு செய்திருக்க வேண்டியதுடன், உரிய உள்ளூராட்சித் தாபனத்திற்கு வரி அத்துடன்/அல்லது அரச மற்றும் மாகாண சபையினால் காலத்திற்குக்காலம் அமுல்படுத்தப்படும் வரி மற்றும் கட்டணத்தினைச் செலுத்துபவராக இருத்தல் வேண்டும்.*

***1. "ஏ" தர மோட்டார் வாகன பழுதுபார்ப்புச் சாலைகளுக்காக விண்ணப்பதாரிகளுக்கு இருக்கவேண்டிய தகுதிகள்:***

*1. 1 வசதிகள்* :

I *20 அடி நீளம் 2 1/2 அடி அகலம், 4 1/2 அடி ஆழத்தைக் கொண்ட குழி அல்லது வாகனங்களை சோதனையிடுவதற்குத் தேவையான அதையொத்த வசதிகளை வழங்கும் சோதன மேடை அல்லது உயர்த்தி* ;

II *டரப்லி மீற்றர் ரோலர் பிரேக் ரெஸ்டர்* ;

III *பிரதான விளக்கைப் பரிசோதிப்பதற்கு உபகரணம் ஒன்று அல்லது உரிய இடத்துடன் பலகை* ;

IV *பரிசோதனை விளக்கு* ;

V *சோதனை நடவடிக்கைக்குரிய சாவிக் கொத்துக்கள் (அங்கீகரிக்கப்பட்ட அளவுகளுக்கு ஏற்ப ஒவ்வொரு அளவுகளிலும் சாவிகள்)* ;

VI *எலைமண்ட்கேஜ் ஒன்று* ;

VII *மின்சார மற்றும் ஒட்டும் உபகரணங்கள்.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**1. 2 சான்றுப்படுத்தும் உத்தியோகத்தர்கள் மற்றும் பணிக் குழுவினர் :**

(i) இயந்திரப் பொறியியல் விஞ்ஞானத்தில், தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமாச் சான்றிதழ் மற்றும் கனிஷ்ட தொழில்நுட்ப அலுவலர் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் ;

அல்லது

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்கு சமமான சீடி அண்ட் கில்டஸ் நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் மோட்டார் இயந்திரவியல் தொடர்பான முழுமையான தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் ;

அத்துடன்

ஏற்றுக்கொள்ளப்பட்ட வாகன பழுதுபார்ப்பு நிலையத்தில் ஆகக் குறைந்தது 2 ஆண்டுகள் தொழில்நுட்பம் தொடர்பான அனுபவம் இருத்தல் வேண்டும். (மோட்டார் வாகன இயந்திரவியல் தொடர்பான வெளிநாட்டு பயிற்சி பெற்றிருப்பவர்களை மற்றும் மோட்டார் தொழில்நுட்பவியல் தொடர்பாக ஜேமன் தொழில்நுட்பக் கல்லூரியில் சான்றிதழைப் பெற்று அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாபனம் ஒன்றில் மோட்டார் வாகன இயந்திரவியல் தொடர்பாக 15 வருடங்களைவிட அதிக காலம் அனுபவம் உள்ளவர்களை அவர்களின் தகைமைகளுக்கு இணங்க மேலே கூறப்பட்ட தேவைகளிலிருந்து விடுவிப்பது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்.) ;

(iii) சான்றுப்படுத்துபவர் பாரமான வாகனங்களைச் செலுத்துவதற்குரிய சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றிருக்க வேண்டும் ;

(iv) சான்றுப்படுத்தும் அலுவலர் வாகனம் பழுது பார்க்கும் நிலையத்தின் நிரந்தர ஊழியராக இருத்தல் வேண்டும்;

(v) வாகனம் பழுது பார்க்கும் நிலையத்தில் ஆகக் குறைந்தது ஒரு முகாமையாளருடன் தேவையான பணிக்குழுவினர் இருக்க வேண்டும் ;

**2."பீ" தர மோட்டார் வாகன பழுதுபார்ப்புச் சாலைகளுக்கு இருக்கவேண்டிய தகுதிகள் :**

2. 1 வசதிகள் :

I 20 அடி நீளம் 2 1/2 அடி அகலம், 4 1/2 அடி ஆழத்தைக் கொண்ட குழி அல்லது வாகனங்களை சோதனையிடுவதற்குத் தேவையான அதையொத்த வசதிகளை வழங்கும் சோதன மேடை அல்லது உயர்த்தி ;

II டரப்லி மீற்றர் ரோலர் பிரேக் ரெஸ்டர் ;

III பிரதான விளக்கைப் பரிசோதிப்பதற்கு உபகரணம் ஒன்று அல்லது உரிய இடத்துடன் பலகை ;

IV சோதனை நடவடிக்கைக்குரிய சாவிக் கொத்துக்கள் (அங்கீகரிக்கப்பட்ட அளவுகளுக்கு ஏற்ப ஒவ்வொரு அளவுகளிலும் சாவிகள்)

**2. 2 சான்றுப்படுத்தும் உத்தியோகத்தர்கள் மற்றும் பணிக் குழுவினர் :**

(i) இயந்திரப் பொறியியல் விஞ்ஞானத்தில், தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமாச் சான்றிதழ் மற்றும் கனிஷ்ட தொழில்நுட்ப அலுவலர் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் ;

அல்லது

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்கு சமமான சீடி அண்ட் கில்டஸ் நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் மோட்டார் இயந்திரவியல் தொடர்பான முழுமையான தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் ;

அத்துடன்

ஏற்றுக்கொள்ளப்பட்ட வாகன பழுதுபார்ப்பு நிலையத்தில் ஆகக் குறைந்தது 2 ஆண்டுகள் தொழில்நுட்பம் தொடர்பான அனுபவம் இருத்தல் வேண்டும். (மோட்டார் வாகன இயந்திரவியல் தொடர்பான வெளிநாட்டு பயிற்சி பெற்றிருப்பவர்களை மற்றும் மோட்டார் தொழில்நுட்பவியல் தொடர்பாக ஜேமன் தொழில்நுட்பக் கல்லூரியில் சான்றிதழைப் பெற்று அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாபனம் ஒன்றில் மோட்டார் வாகன இயந்திரவியல் தொடர்பாக 15 வருடங்களைவிட அதிக காலம் அனுபவம் உள்ளவர்களை அவர்களின் தகைமைகளுக்கு இணங்க மேலே கூறப்பட்ட தேவைகளிலிருந்து விடுவிப்பது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்.) ;

(iii) சான்றுப்படுத்துபவர் பாரமான வாகனங்களைச் செலுத்துவதற்குரிய சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றிருக்க வேண்டும்.

**3."ஏ" தர மற்றும் "பீ" தர வாகனங்களைப் பழுது பார்க்கும் நிலையங்களில் சோதனை செய்யக்கூடிய வாகனத் தொகுதிகள் பின்வருமாறு : -**

| A தர வாகனங்களைப் பழுது பார்க்கும் நிலையங்களில் சோதனை செய்யக்கூடிய வாகனத் தொகுதிகள் பின்வருமாறு | B தர வாகனங்களைப் பழுது பார்க்கும் நிலையங்களில் சோதனை செய்யக்கூடிய வாகனத் தொகுதிகள் பின்வருமாறு |
|---|---|
| ஓம்னி பஸ் | - |
| தனிப்பட்ட கோச் | தனிப்பட்ட கோச் |
| மோட்டார் லொறி | மோட்டார் லொறி |
| அம்புலன்ஸ் வண்டி, இறுதிக் கிரியை வண்டி | அம்புலன்ஸ் வண்டி, இறுதிக் கிரியை வண்டி |
| லொறி ரேலர் | லொறி ரேலர் |
| விசேட விடய வாகனம் | விசேட விடய வாகனம் |
| மூன்று சக்கர வேன் | மூன்று சக்கர வேன் |

பின்வரும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(i) கம்பனிகள் பதிவாளரினால் வாகன பழுதுபார்ப்பு நிலையத்தினை பதிவு செய்த சான்றிதழ் பிரதி ;

(ii) உரிய உள்ளூராட்சித் தாபனத்திற்கு வரி அத்துடன்/அல்லது வியாபாரக் குத்தகையினைச் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதி ;

(iii) நகரின் மத்தியிலிருந்து உண்மையான அமைவிடம்/வாகன பழுதுபார்ப்புச் சாலைக்கு அண்மிக்கக்கூடிய வீதியினைக் காட்டும் வரைபடம் ;

(iv) உத்தேச சான்றுப்படுத்தும் அலுவலரின் தகைமைகள் மற்றும் அவர்களின் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி;

(v) மீள் செலுத்தப்படாத வைப்பு நிதியாகக் காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்டுள்ள கட்டணத்தினை இக்காரியாலயத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட மே. மா. 1 பற்றுச் சீட்டு.

தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள வாகன பழுதுபார்ப்பு நிலையத்தின் அமைவிடம் மற்றும் சோதனை அலுவலர் மாற்றமடையாவிடத்து மேலே (iii) மற்றும் (iv) என்பவற்றைச் சமர்ப்பிப்பது தேவையற்றது.

லலித் வணிகரத்ன,
மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான அமைச்சர்.
(மேல் மாகாணம்).

மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்
வியாபாரம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட
உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும்
கிராமிய அபிவிருத்தி அமைச்சு
(மேல் மாகாணம்),
இல. 89, 4 ஆவது மாடி, "ரண்மகபாய", கடுவெல வீதி,
பத்தரமுல்லை.
2016, ஓகத்து 23.

9- 250

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.